வெளியிடுவதற்கான அளவிலே ஒரு அதிகாரத்தை பெறுவதற்கான ஒரு சட்ட முன்வடிவினை மாண்புமிகு மின்சார துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புவது எல்லாம் வரி பாக்கி எப்படி வந்தது என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்த்தாக வேண்டும். நிர்வாகத்தை முதலிலே சீர்திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். வாரியத்திலே இருக்கிற துறைகளில் வேலை செய்பவர்கள் சங்கங்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த சங்கங்கள் மூலமாக அவர்களதங்கள் பிரச்சினைகளை தீர்வு காண கேட்டும் கூட எதுவும் நிலைமைகள் மாறாத காரணத்தால் இஷ்டம்போல பில்களை போடுகிற நிலைமை ஏற்பட்டது 6 மாத காலத்திற்கு, அல்லது ஒரு வருட காலத்திற்கு என்று சேர்த்து வைத்து பில்களைப் போட்டு அனுப்பினால் கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை விவசாயிகளினால் எப்படி அதை ஒழுங்காக கட்ட முடியும் என்பதை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்............. (குறுக்கீடு).

6. ஒழுங்குப் பிரச்சினை

கண்வலியோடு உறுப்பினர் அவைக்கு வருதல்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாய்ன்ட் ஆப் ஆர்டர் நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு கண் சிவந்துபோகின்ற அளவிற்கு கடுமையான கண்நோய் வந்திருக்கிறது. அவர் கூலிங் கிளாஸ் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கலாம். பரவாயில்லை ஆனால் அது எங்களுக்கும் .பரவும் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் தனியாகத்தான் உட்கார்ந்திருக்கிறேன். யாருக்கும் பரவாது.

(பிற்பகல் 12 20)

திரு. நா. சுந்தரராஜ்: ஒரு முன் உதாரணம் இருக்கிறது. கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் நமது சேடப்பட்டி முத்தையா அவர்களை அன்றிருந்த சபாநாயகர் அவர்கள் வெளியேற்றினார் கண்வலி என்ற காரணத்தால், இது மற்றவர்களுக்கும் பரவிவிடும் ஆகவே....

திரு. மு. அம்பிகாபதி: கண்வலி என்றால் அது காற்றிலே பரவி இம்மன்றத்தில் உள்ள அனைவரும் தாக்கப்படுகிற நிலை இருக்கிறது. எனவே, எங்களைப் பாதுகாப்பதற்காக நீங்கள் தயவுசெய்து............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் எல்லோருடைய வேண்டுகோளுக்கிணங்க நானே போய்விடுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).